**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Calender | : | } | Miscellaneous | : | |
| Preliminary Register | : | | Case No. | : | **S.C.19/2022** |
| Sessions | : | | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 16** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | தயாளன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **06.03.2026**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாடாலூர் காவல்நிலையத்தில் தலைமைகாவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.01.2021ம் தேதி குன்னம் காவல்நிலையத்தில் தலைமைகாவலராக பணிபுரிந்தபோது குன்னம் காவல்நிலைய குற்ற எண்.67/2021 சட்டப்பிரிவு 294(b), 307, 302 இதச வழக்கில் இறந்துபோன கருப்பையா வயது 60 த/பெ. சுப்ரமணியன் காட்டுக்கொட்டகை பெரியம்மாபாளையம் குன்னம் வட்டம், பெரம்பலூர் மாவட்டம் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேதகூராய்வு செய்ய 10.50 மணிக்கு ஆய்வாளரின் வேண்டுக்கோளை பெற்று பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனை இருக்கை அறிக்கை மருத்துவரிடம் 11.50 மணிக்கு தபாலை கொடுத்தேன். பின்னர் 12.30 மணிக்கு மருத்துவரிடம் இறந்துபோனவரின் பிரேத்தை அடையாளம் காட்டினேன். பிரேதகூராய்வு முடிந்தபின்னர் பிரேதத்தை உறவினரிடம் ஒப்படைத்தேன். இறந்துபோனவரின் பிரேதத்தில் இருந்து எடுக்கப்பட்ட ஊதா வெள்ளை கருப்பு நிற கட்டம்போட்ட கைலியை பெற்று

15.30 மணிக்கு தனியறிக்கையுடன் அதை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். அந்த ஊதா வெள்ளை கருப்பு நிற கட்டம்போட்ட கைலி சா.பொ.1, இதுசம்மந்தமாக எனக்கு வழங்கப்பட்ட கடவுசீட்டு அ.சா.ஆ.9, வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

ஆய்வாளர் விசாரணையின் போது நான் பிரேதத்தை அடையாளம் காட்டிய நேரம் 12.30 மணி என்று சொன்னேன். என்னுடைய விசாரணை வாக்குமூலத்தில் 11.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வாளர் விசாரணையின் போது சா.பொ.1 கைலியை நான் ஒப்படைத்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன், வாக்குமூலத்தில் அது பதிவுசெய்யப்படவில்லை. நான் முதல்விசாரணையில் சொன்ன நாளில், நேரத்தில் பிரேதகூராய்வு வேண்டுகோளுடன் பணிக்கு செல்லவில்லை என்றும், பிரேகூராய்வு முடிந்தவுடன் சா.பொ.1 கைலியை தனியறிக்கையுடன் ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றும், அவ்வாறு நான் ஒப்படைத்திருந்தால் ஆய்வாளரிடம் தனியறிக்கை கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.